# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

ஞாயிற்றுக்கிழமை 07.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com









# கொரோனா மரண உடலங்களை வைத்து மீண்டும் ஒரு பிரிவினையை அரசு கையாளுகின்றது

(ந.குகதர்சன், துதி )

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து நாடுகளையும் நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும்,

02 ஆம் பக்கத்தில்...

## 2 வது நாள் 08 ஜனாஸாக்கள் நல்லடக்கம்



( எஸ்.எம்.எம்.முர்ஷித். என்.குகதர்ஸன்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய நேற்றுசனிக்கிழமை இரண்டாவது நாள் இரவு ஏழுமணிவரை எட்டு

02 ஆம் பக்கத்தில்...

## மையத்து குழிக்குள் படுத்துக் கொண்டும் நேரலை போடுவார்கள்



### இம்ரான் மஹ்ரூப் எம்.பி கடும் சாடல்

(ஹஸ்பர் ஏ ஹலீம் , எப்.முபாரக் )

இருபதுக்கு வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மையத்து குழிக்குள் படுத்துக் கொண்டும் நேரலை போடுவார்கள் என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். நேற்று(06) கிண்ணியாவில் நடைபெற்ற

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாசாக்களை எரிக்கின்ற விடயத்திற்கு நிரந்திர தீர்வு கிடைக்கப்பெற்றாலும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமை ஓங்க வேண்டும்



( பாறுக் ஷிஹான் )

முஸ்லீம்களின் அடிப்படை மதக்கடமையாக இருக்கக்கூடிய ஜனாசாக்களை எரிக்கின்ற விடயத்திற்கும் நீதி வேண்டி போராடி இருந்தோம்.தற்போது அதற்கான தற்காலிக

02 ஆம் பக்கத்தில்...

## சுழற்சி முறையில் நடக்கும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் அம்பாறையில் பங்குபற்றியவர்களுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வருகின்ற சுழற்சி முறையில்

02 ஆம் பக்கத்தில்...

## திருக்கோணேசப் பெருமானின் மஹா சிவராத்திரி பெருவிழா 2021



(பொன்ஆனந்தம்)

அருள்மிகு மாதுமையம்பாள் உடனுறை கோணேசப் பெருமானின் திருக்கோயிலில், நிகழும் மங்களகரமான சார்வரி வருடம் மாசி மாதம் 27 ம் நாள்

07 ஆம் பக்கத்தில்...

## பதுளை- கொழும்பு பஸ் விபத்து; 35 பேர் காயம்



(க.கிஷாந்தன்)

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று பதுளை கொழும்பு பிரதான வீதியில் எல்ல அல்ப்ப பகுதியில் குடைசாய்ந்துள்ளது.

பதுளை பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு பகுதிக்கு சென்ற குறித்த பஸ் 06.03.2021 அன்று காலை 9

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு மாவட்டத்தில் 36000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், 8000 இற்கு மேற்பட்ட மாற்றுதிறனாளிகள்

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



(ரக்ஸனா)

யுத்தத்திற்கு பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர், யுத்தத்திலே பங்குபற்றியவர்கள், யுத்தத்தில் பங்கு கொண்டவர்களின் பிள்ளைகள் என 3 தலைமுறையாக எமது மக்கள் கடந்த காலத்தில் யுத்ததில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 36000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளார்கள். 8000 இற்கு மேற்பட்ட மாற்றுதிறனாளிகள் உள்ளார்கள். இந்நிலையில் பல்வேறு தேவைகளைக் கொண்டு நமது மாவட்டம் உள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு

### சந்திரகாந்தன் எம்.பி தெரிவிப்பு



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நல்ல முடிவை எடுத்திருக்கின்றார்கள். இதுதான் தேவை எங்கள் மாவட்டத்திற்கு. அபிவிருத்தி சார்ந்த விடயத்துக்கு நானும், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்களும், செயற்படுகின்றோம். அதே போன்று மக்களின் உரிமையை தட்டிக்கேட்க இருவரையும் மட்டக்களப்பு மக்கள் நிதானமாக தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள்

07 ஆம் பக்கத்தில்...

## டிப்பர் விபத்தில் ஒருவர் பலி; சாரதிக்கு படுகாயம்!

(எச்.எம்.எம்.பர்ஸான் ந.குகதர்சன்)

டிப்பர் பட்டா வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை பொலிஸ் சாவடி பகுதியில் வைத்தே இவ் விபத்து நேற்று (6) அதிகாலை 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியிலிருந்து

02 ஆம் பக்கத்தில்...

## பொம்மையாக இருந்து அரசியலுக்கு வந்தவன் அல்ல நெருப்பாறு கடந்தே அரசியலுக்கு வந்துள்ளேன்

### நல்லூரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டம்

( ச.தவசீலன்)

சமுர்த்தி திட்டத்தை யாழ்ப்பாணத்திற்கு ஒரு நெருக்கடியான சூழலில் நானே கொண்டுவந்தேன். சமுர்த்தி செயற்பாடுகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம். ஆனால் எவரும் தமது சுயநலன்களுக்காக இந்த வேலைத் திட்டத்தை நடத்த முற்படக்கூடாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வாரத்தினை அங்குரார்ப்பணம் செய்து பயனாளிகளுக்கு

02 ஆம் பக்கத்தில்...








## டிப்பர் விபத்தில் ஒருவர் பலி; சாரதிக்கு படுகாயம்!

குறித்த பகுதியால் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வண்டியுடன் புத்தளத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி தேங்காய்கள் ஏற்றி வந்த பட்டா வாகனம் மோதியதிலே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவ் விபத்தில் டிப்பரில் சென்ற மீராவோடை பிரதேசத்தை சேர்ந்த 3% வயதுடைய மீரா முகைதீன் மன்சூர் எனும் டிப்பர் உதவியாளர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளதுடன், ஓட்டமாவடியைச் சேர்ந்த நாகூர் முகம்மது ஹனீபா (51வயது) எனும் டிப்பர் சாரதி படுகாயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் பட்டா வாகன சாரதியை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மட்டு மாவட்டத்தில் 36000 பெண்கள் தலைமை தாங்கும்..

மாறாக அர்ஜூன் அலோசியஸ் அவர்கள் 450 கோடி ரூபாவிலே எதனோல் தொழிற்சாலையைக் கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் எமது அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு எனும் கொள்கைப் பிரகடனத்தின்கீழ் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கைத்தறி நெசவு உற்பத்தி கிராமம் ஆரம்ப நிகழ்வு வெள்ளிக்கிழமை(05) மாலை மட்டக்களப்பு எருவில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையிலே முதலாவது ஆடைக்கைத்தறிப் பூங்கா மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று புன்னக்குடாவில் 292 ஏக்கர் நிலப்பரப்பில் அரசாங்கத்தினல் 300 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில், ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2800 சதுரக்கிலோமீற்றர் நிலப்பரைப்பைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலைகூட உருப்படியாக இல்லை.

800 மில்லியன் ரூபாவில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுள்ளன. 10000 மில்லியன் நிதி இலங்கையில் தொழில் நுட்ப பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. அந்த தொழில் நுட்ப பூங்கா 2000 மில்லியன் சொலவில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் வரவுள்ளது. இந்த மாட்டத்தில் பிரதேச செயலகங்கள் தோறும் சுயதொழில் முயற்சியாளர்க்ள உருவாக்கப்படல் வேண்டும். தொழிற்சாலைகள் கொண்டுவரப்படல் வேண்டும்.

கொவிட் 19 அச்சம் இன்னும் நீடிக்குமானால் நாம் இன்னும் வெளிநாடுகளை நம்பியிராமல் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க வேண்டும். ஜனாதிபதி அவர்கள் உற்பத்திக் கிராமங்களை உருவாக்கி வருகின்றார். அவ்வாறு இல்லையேல் நாம் அனைத்திற்கும் வெளிநாட்டிலேதான் கையேந்தி நிற்கவேண்டி வரும்.

இலங்கை சுதந்திரமடைந்;த பின்னர் 49 சதவீதம் விவசாயத்தில் வருமானத்தை ஈட்டிய எமது நாட்டில் தற்போது %.9 வீதம் தான் இலங்கையில் விவசாய உற்பத்தியாகவுள்ளது. ஆகவே அனைவரும் உற்பத்தியாளர்களாக மாற வேண்டும். நமது நாடு தன்னிறைவடைய வேண்டுமானால் ஒவ்வொரு கிராமங்களும், ஒவ்வொரு உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும். எங்களுக்குத் தேவையானதை நாங்களே உற்பத்தி செய்ய வேண்டும். இந்நிலையிலும் மக்கள் மத்தியில் கடன் சுமையை சுமத்தக்கூடாது என்பதற்காக வங்கிகளில் வட்டி வீதத்தை அரசாங்கம் குறைத்துள்ளது.

ஒரு கிராம சேவை பிரிவுக்காக அரசாங்கம் பல அரச உத்தியோகஸ்த்தர்களை நியமித்துள்ளார்கள். ஆனாலும் சில அரச உத்தியோகஸ்த்தர்கள் குட்டி ராஜாக்கள்போல் மக்கள் அர்வகளைச் சந்திக்க முடியாது, தொலைபேசியில் கதைக்க முடியாது, அரச நிதி திரும்பிச் செல்கின்றது, நன்றாக சேவை செய்கின்றனர்கள் மத்தியில், இவ்வாறு ஒரு சில அதிகாரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். எனவே அரச உத்தியோகஸ்த்தர்கள் மக்களுக்கு விழிப்புணர்வில் ஈடுபடல் வேண்டும். என அவர் இதன்போது தெரிவித்தார்.

## பதுளை- கொழும்பு பஸ் விபத்து; 35 பேர் காயம்

மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் பஸ்ஸில் பயணித்த 35 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த 35 பேரில், 10 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர், ஏனையோர் சிறு சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் பதுளை மற்றும் தெமோதர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொம்மையாக இருந்து அரசியலுக்கு வந்தவன்...

உதவித்திட்ட காசோலைகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்.

''யாழ். மாவட்ட மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரின் பெயரால் அவரின் இணைப்பாளர்கள் எனப்படுவோர் மிரட்டல் விடுப்பதாகவும், அழுத்தம் கொடுப்பதாகவும் பல முறைப்பாடுகள் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

அவ்வாறான அநாகரீகமான செயற்பாடுகள் குறித்த ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருக்கு தெரிந்து நடக்கின்றதா, தெரியாமல் நடக்கின்றதா என்பது தொடர்பாக அவருடன் கலந்துரையாடவுள்ளேன். அவருக்கு தெரியாமல் நடக்குமாக இருந்தால், இவ்வாறான அநாகரிகமான செயலை அவர் கட்டுப்படுத்த வேண்டும்.

மாறாக, அவருக்கு தெரிந்துதான் அரச அதிகாரிகளுக்கான மிரட்டலும்,அழுத்தங்களும் அவரது இணைப்பாளர்களால் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி முடிவொன்றைக் காண்பேன்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல கிளிநொச்சி அதிகாரிகளிடமும் அழுத்தங்கள பிரயோகித்திருக்கின்றனர். எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு ஆலோசனை கூறியிருக்கின்றார்கள்.

ஆனால் சிரேஸ்ட அதிகாரியான கிளிநொச்சி அரச அதிபர் தகுந்த யாருடைய ஆலோசனையையும் கேட்கும் அவசியம் தனக்கு இல்லை என்று தகுந்த பதில் அளித்துள்ளார்.

யாழ். கிளிநொச்சி மக்களினால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்டு சிரேஸ்ட நாடாளுமன்ற உறுப்பிராகவும், சிரேஸ்ட அமைச்சராகவும் இருக்கின்ற என்னை இந்த மக்களிடம் இருந்து சண்டித்தனத்தினால் பிரித்து விடமுடியாது.'' என்று கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், ''நான் தூரத்தே இருந்து வேடிக்கை பார்த்துவிட்டு அதாவது ஒரு பொம்மையாக இருந்துவிட்டு அரசியலுக்குள் வரவில்லை. பல நெருப்பாறுகளைக் கடந்தே தமிழ் மக்களின் அரசியலுக்குள் வந்தவன்'' என்றும் தெரிவித்தார்.

## ஜனாசாக்களை எரிக்கின்ற விடயத்திற்கு...

தீர்வு கிடைத்திருக்கின்றது.அதிலும் கூட சில சிக்கல்களை வைத்து தான் வழங்கி உள்ளனர்.இதற்கு நிரந்தர தீர்வு கிடைக்கப் பெற்றாலும் தமிழ் முஸ்லீம் ஒற்றுமை ஓங்க வேண்டும்.

முஸ்லீம்கள் எமது நீதியான போராட்டங்களில் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை வழங்க வேண்டும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவருமான தாமோதரம் பிரதீபன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்று வருகின்ற சுழற்சி முறையில் நடக்கும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் இன்று மாலை கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

எமது போராட்டமானது ஒட்டுமொத்தமான தமிழ் பேசும் மக்களுக்கானதாகும். இந்த போராட்டத்தில் இனம் மதம் மொழி பாராது அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.குறிப்பாக தமிழர்கள் கலந்து கொள்ள வேண்டும் என பொதுத்தளங்களில் வெளியிட்டு கொண்டிருக்கின்றோம்.எனவே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்கியது போன்று முஸ்லீம் மக்களை இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு பகிரங்கமாக அழைக்கின்றோம்.பி2பி என்ற பேரணியில் ஒட்டுமொத்தமாக தமிழர்களின் பிரச்சினைகளையே முன்வைத்து நடாத்தி இருந்தோம்.முஸ்லீம்களின் அடிப்படை மதக்கடமையாக இருக்கக்கூடிய ஜனாசாக்களை எரிக்கின்ற விடயத்திற்கும் நீதி வேண்டி போராடி இருந்தோம்.தற்போது அதற்கான தற்காலிக தீர்வு கிடைத்திருக்கின்றது.அதிலும் கூட சில சிக்கல்களை வைத்து தான் வழங்கிஉள்ளனர்.இதற்கு நிரந்திர தீர்வு கிடைக்கப்பெற்றாலும் தமிழ் முஸ்லீம் ஒற்றுமை ஓங்க வேண்டும்.

முஸ்லீம்கள் எமது நீதியான போராட்டங்களில் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை வழங்க வேண்டும்.ஜனாசா எரிப்பு விடயம் நிறுத்தப்படுவதற்கு பாகிஸ்தான் பிரதமரின் வருகையுடன் முற்றுப்பெற்றதான ஒரு கருத்து கூறப்பட்ட போதிலும் கூட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான எமது பேரணியும் வலுச்சேர்த்துள்ளது என்பதே உண்மையான காரணமாகும். அவர் வருகை தந்ததும் ஒரு இராஜதந்திர நடவடிக்கையாக இருக்கலாம்.அரசியல் பின்னணிகள் இருக்கலாம்.மக்களின் பேரெழுச்சியும் இதற்கு ஒட்டுமொத்த காரணமாகும்.காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடன் இணைந்து நான் பயணித்துக்கொண்டு இருக்கின்றேன். இப்போராட்டமானது அனைத்து மட்டங்களிலும் பொதுவாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

## சுழற்சி முறையில் நடக்கும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில்...

நடக்கும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு நீதிமன்ற கட்டளை தடையுத்தரவு பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை(5) ஆரம்பமாகி இப்போராட்டம் இடம்பெற்று வந்த நிலையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி இந்திக்க உதயங்கர தலைமையிலான பொலிஸ் குழு போராட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு தற்போது கல்முனை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையினை அவ்விடத்தில் வாசித்ததுடன் மாலை சம்பந்தப்பட்டவர்களுக்கும் வழங்கினர்.

இதன் போது அம்பாரை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் ,கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவர் தாமோதரம் பிரதீபன் ,அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி, நாவிதன் வெளி பிரதேச சபை உறுப்பினர் என். தர்சினி , கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், உட்பட பலருக்கு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை இடம்பெற்ற பேரணி போது கலந்துகொண்ட மக்கள் குறித்த சுழற்சி உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் விசேடமாக இப்போராட்டத்தில் முஸ்லிம் மக்களும் இப்போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## மையத்து குழிக்குள் படுத்துக் கொண்டும் நேரலை போடுவார்கள்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாஸா அடக்க போராட்டம் என்பது 2020 ஏப்ரல் மாதம் தொடங்கிய போராட்டம். இன்று பாராளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் பிரச்சார மேடைகளில் இதை பேசியே வாக்கு கேட்டனர். பொதுஜன பெரமுனவுக்கு ஏசி வாக்கு கேட்காத யாரும் இங்கில்லை.

ஆனால் இவ்வாறு தேர்தல் காலம் முழுவதும் இந்த அரசுக்கு ஏசி வாக்கு கேட்டவர்கள் இருபதாம் திருத்தசட்டத்துக்கு ஆதரவு அளித்து அரசுடன் இணைந்து கொண்டபின் ஜனாஸா எரிப்புக்கான எந்த போராட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை.ஏன் இதுவரை இது தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசாத உறுப்பினர் ஒருவர் கூட உள்ளார்.

மக்கள் மத்தியில் இவர்கள் தொடர்பாக விமர்சனங்கள் அதிகரிக்க தாம் ஜனாஸா அடக்க அனுமதி வேண்டியே இருபதுக்கு ஆதரவு அளித்ததாகவும் ஆனால் அரசாங்கம் தம்மை ஏமாற்றிவிட்டதாகவும் அதனால் மக்கள் முன் மன்னிப்பு கேட்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் இருபதுக்கு ஆதரவு தெரிவித்த அடுத்தவாரமே இவர்களுக்கு வேலை வாய்ப்புக்களும் காபட் வீதி ஒப்பந்தங்களும் அரசினால் வழங்கப்பட்டன. ஆகவே இவர்கள் ஜனாஸா தொடர்பாக அரசுடன் ஒப்பந்தம் செய்திருந்தால் ஜனாஸா அடக்கம் செய்வதுக்கான அனுமதியும் உடன் கிடைத்திருக்கும்.

இந்த வேலைவாய்ப்புக்களுக்காகவும் காபட் வீதி ஒப்பந்தங்களுக்காகவும் இது வரை காலமும் எந்தவித போராட்டங்களிலும் கலந்துகொள்ளாது மௌனமாக ஒளிந்துகொண்டிருந்த இவர்கள் 330க்கு மேற்பட்ட ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட பின்னர் சர்வதேச அழுத்தத்தாலும் தொடர்ச்சியான போராட்டத்தாலும் அனுமதி கிடைத்த பின் ஒவ்வொருவராக தாம் தான் இதற்கு அனுமதி எடுத்துத்தந்தது என வெளியில் வர ஆரம்பித்திருக்கிறார்கள்.

அதிலும் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய தாம்தான் இடத்தை தெரிவுசெய்து கொடுத்தது என கூறி ஜனாஸா குழிகளை முகப்புத்தகத்தில் நேரலை போடுமளவுக்கு கீழ்த்தரமாக சென்றுவிட்டனர்.விட்டால் மையத்து குழிக்குள் படுத்துக்கொண்டும் நேரலை போடுவார்கள் என தெரிவித்தார்.

## 2 வது நாள் 08 ஜனாஸாக்கள் நல்லடக்கம்...

ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சூடுபத்தினசேனை என்ற இடத்தில் கொரோனா தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சிபார்சு வழங்கப்பட்டுள்ள நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் மாத்திரம் கொரோனாவினால் மரணித்தவர்களின் பதினேழு ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை நிட்டம்புவ பிரதேசத்தினை சேர்ந்த நான்கு பேர் திகாரி பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் அநுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் நாரங்கொடயை சேர்ந்த ஒருவர் கொழும்பைச் சேர்ந்த ஒருவருமாக எட்டு ஜனாசாக்கள் நேற்று இரவு ஏழு மணிவரை நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி மஜ்மாநகர் பகுதியில் நேற்று முன்தினம் 09 ஜனாசாக்களும் நேற்றைய தினத்தில் இரவு ஏழுமணிவரை அடக்கப்பட்ட 08 ஜனாசாக்களையும் சேர்த்து 1% ஜனாசாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அடக்கம் செய்யும் பணி இன்று இரவு 11மணிவரை தொடர உள்ளதாகவும் களத்தில் செயலாற்றும் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்தார்.

கொரோனா தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் பிரதேசம் தொடர்ந்தும் இராணுவத்தினரில் பாதுகாப்பில் உள்ளதுடன் ஊடகவியலாளர்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மரண உடலங்களை வைத்து மீண்டும்...

கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதரர்களின் கொரோணா உடலங்கள் குறித்தான கோரிக்கையை வைத்து இரு சமூகங்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தும் விதமாக அரசு தன் அரசியலைச் செய்ய முற்படுகின்றமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரை.சாணக்கியன் தெரிவித்தார்.

நேற்று மட்டு ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது தற்போதைய சமகால அரசியல் நிலைமைகள் குறித்தான மூன்று விடயங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சில கூட்டங்களுக்கு ஊடகங்களுக்கும் அனுமதியளிக்கப்படவில்லை என்றே நினைக்கின்றேன். அத்துடன் சில கூட்டங்களில் பிரதேச சபை உறுப்பினர்களுக்குக் கூட அனுமதியளிக்கப்படவில்லை என்றும் கேள்விப்பட்டோம். எனவே நடைபெற்றது ஒரு அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்று சொல்ல முடியாது. அனைவரின் நேரத்தையும் வீணடிக்கின்ற கூட்டமாகவே எங்களுக்குத் தென்பட்டது.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் மண்அகழ்வு, இல்மனைட்டு, தொல்பொருள், மேய்ச்சற்தரைப் பிரச்சனை போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் எங்களால் கேள்வியெழுப்பப்பட்டன. அதிலும் குறிப்பாக மண்அகழ்வு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான அதிகாரி அதாவது பதில் வழங்கக் கூடிய அதிகாரி எவ்வித கூட்டங்களுக்கும் கலந்து கொள்ளவில்லை. பதில் சொல்ல முடியாத கனிஸ்ட அதிகாரிகளே அக்கூட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். இவ்வாறிருக்கையில் எவ்வாறு கூட்டங்களில் பிரச்சினைகளைக் கேட்பது, தீர்மானங்களை எடுப்பது?

அதே போன்று கிரான் பிரதேசத்தில் முறுத்தானை பகுதியில் மண் அகழந்து தற்போது அங்கிருக்கும் இரண்டு பாலங்கள் இடிந்து விழும் தருவாயில் இருப்பதாக மக்கள் தெரிவித்தமைக்கமைவாக நான் உட்பட எமது சக பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டத்தில் மக்களுடன் இணைந்து பல அழுத்தத்தைக் கொடுத்தோம். அதன் பின்னரே அங்குள்ள ஒரு சில அனுமதிப்பத்திரங்களை நிறுத்துமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. நடைபெற்ற நான்கு கூட்டங்களிலும் முக்கியமாக எடுக்கப்பட்ட தீர்மானம் அது மாத்திரமே என்றுதான் சொல்ல முடியும்.

இந்த மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித கவனமும் எடுப்பதாக அந்தக் கூட்டங்கள் நடைபெறவில்லை. தங்களுடைய அரசியலை வளர்த்துக் கொள்வதற்கான கூட்டமாகவே இது மாற்றப்பட்டிருந்தது. அதாவது அரசாங்கம் தரும் நிதியை தங்களால் வழங்கப்பட்ட நிதியாக காட்டிக் கொள்வதற்கான முயற்சியாகவே இக்கூட்டங்கள் நிகழ்ந்தன.

இன்னுமொரு விடயம் கொவிட் தொற்றினால் இறந்த உடலங்களை அவர்களின் உறவினர்கள் இருக்கும் இடத்தைத் தாண்டி சுமார் 200 கிலோமீட்டர்களுக்கும் மேல் கொண்டு சென்று புதைப்பதற்கு அந்த உறவினர்கள் உடன்படமாட்டார்கள். அவர்கள் பிரதேசங்களில் உடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கத் தயார் எனும் போது இதனை வைத்து அரசாங்கம் அரசியல் செய்வதென்பது மிகவும் கேள்விக்குட்படுத்தும் விடயமாகும். கிறிஸ்தவ, இஸ்லாமிய சகோதரர்களின் கோரிக்கையை வைத்து அரசியல் செய்கின்ற அரசு அதன் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தினூடாகவும் தன் அரசியலைச் செய்ய முற்படுகின்றமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்று தெரிவித்தார்.




SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen




# அட்டன் உதைப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வீரர்கள் டன்பார் விளையாட்டு மைதானத்தில் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

அட்டன் உதைப்பந்தாட்ட சம்மேளனம் ஒரு உதைப்பந்தாட்ட கழகத்திற்கு தனது தீர்ப்பின் மூலம் அநீதி இழைத்துள்ளதாக தெரிவித்து யம் மேட்ஸ் விளையாட்டு கழக வீரர்கள் சனிக்கிழமை பதாதைகளை காட்சிப்படுத்திய வண்ணம் அட்டன் டன்பார் மைதானத்தில் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதில் அட்டனில் உதைப்பந்தாட்டத்தை பாதுகாப்போம், குற்றத்தை வளர்ப்பவர்களை வெறுக்கிறோம், ஒரே கிண்ணத்திற்கு இரண்டு சட்டங்களா? தலைவரின் இறுதி முடிவு செல்லுபடியற்றதா? போன்ற வாசகம் எழுதிய பதாதைகளை காட்சிப்படுத்தியவாறு சுகாதார பொறிமுறைக்கமைய அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தெரிய வருவதாவது, அட்டன் தலைவர் உதைப்பந்தாட்ட கிண்ணம் கடந்த வருடம் நடைபெற்றுள்ளது. குறித்த கிண்ணத்திற்காக யம் மேட்ஸ் விளையாட்டு கழகம்,ஸ்மோல் டிரேட்டன் விளையாட்டு கழகம் ஆகிய இரண்டுக்கும் எதிராக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இதனை விசாரணை செய்த அட்டன் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுக்காற்று குழு ஒரு விளையாட்டு வீரர் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகத்திற்கு மாத்திரம் விளையாட வேண்டும் குறித்த காலிமுத்து கிசாந்தன் என்பவர் இரண்டு கழங்களில் விளையாடி விதிமுறைகளை மீறி செயற்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே இரண்டு கழகங்களையும் 2020.01.31. இருந்து 2021.01.31 வரை தடை செய்யப்பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ் நிலையில் அதே அட்டன் தலைவர் கிண்ண இறுதி போட்டிக்கு ஒரு குழுவினை மாத்திரம் மீண்டும் இணைத்துக்கொண்டு இதில் யம் மேட்ஸ் கழகத்திற்கு அநீதி இழைத்துள்ளதாக விளையாட்டு வீரர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது குறித்து தாங்கள் நீதி மன்றத்தினை நாடி தடை உத்தரவு ஒன்றினை பெறப்படவுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திர விதி முறைகளை மீறிய சட்டவிரோத மணல் அகழ்வு

## நேரில் சென்று ஆராய்ந்த அதிகாரிகள்









(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெறுகின்ற மணல் அகழ்வு கிரவல் அகழ்வு கருங்கல் அகழ்வு போன்ற கனிய வளங்களை பெற்றுக் கொள்கின்ற இடங்களிலே பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளும் கனியவளங்களை அழிக்கக்கூடிய வகையிலும் பாரிய சூழலியல் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும் அளவிலும் குறித்த பணிகள் இடம்பெறுகின்றன.

அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பல தடவைகள் பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஒரு சீரான ஒழுங்குபடுத்தலுக்குள் கொண்டு வரும் முகமாக குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளை நிறுத்தி அது தொடர்பில் மாவட்டத்தில் ஒரு குழு ஒன்றை அமைத்து அதனுடைய சிபார்சின் அடிப்படையில் இந்த விடயங்களையும் முன்னெடுப்பதாக தீர்மானித்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் அவர்கள் குறித்த விடயம் தொடர்பில் ஆராயும் முகமாக மாவட்ட குழுவின் கலந்துரையாடலை வெள்ளிக்கிழமை மாலை நடத்தியிருந்தார்

இங்கே குறித்த சட்டவிரோத அகழ்வு மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்று அனுமதிப் பத்திர விதிமுறைகளை மீறி இடம்பெறுகின்ற அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது தொடர்ந்து தொடர்ச்சியாக முறைப்பாடு வைக்கப்பட்ட சில இடங்களை நேரில் சென்று அதிகாரிகள் ஆராய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று மாலை கூட்டத்தை தொடர்ந்து சிலாவத்தை மற்றும் உப்புமாவெளி பகுதிகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பிலும் அனுமதிப்பத்திரங்கள் பெற்று அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையிழும் இடம்பெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பில் கிடைக்கப்பெற்ற பாரிய முறைப்பாடுகளை தொடர்ந்து குறித்த பகுதியில் சட்டபூர்வமாக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட இடத்தில் எவ்வாறு அகழ்வு இடம் பெறுகின்றது என்பது தொடர்பிலும் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுகின்ற சில இடங்களையும் நேரில் சென்று அதிகாரிகள் ஆராய்ந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான காதர் மஸ்தான் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் புவிச்சரிதவியல் மற்றும் கனியமணல் சுரங்கங்கள் பணியக (ஜி எஸ் எம் பி ) பொறியியலாளர் காணி உதித்தியோகத்தர்கள் போலீஸ் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த குழுவில் இணைந்திருந்தார்.

இதன்போது அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களிலும் அனுமதிப்பத்திர நடைமுறைகளை மீறி பாரிய அளவில் மணல் அகழ்வு இடம் பெற்றிருப்பதற்கான ஆதாரங்கள் காணப்பட்டதோடு சட்டவிரோதமாக சில இடங்களில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றமையும் கண்டறியப்பட்டது இதனை தொடர்ந்து அபிவிருத்திக் குழு தலைவர் அவர்களால் பொலிசாருக்கு இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய அறிக்கை சமர்ப்பிக்குமாறும் இவற்றைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்திருந்தார்.

குறித்த பகுதிகளில் தனியாரின் காணிகளிலேயே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பிரதேச சபை உப தவிசாளர் அஹமட் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

உப தவிசாளர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் உப தவிசாளர் யூ.எல்.அஹமட் லெப்பை நேற்றுதெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி சார்பாக கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட நான் சுமார் மூன்று வருடங்களாக தன்னால் முடிந்த பணிகளை மக்களுக்கு செய்துள்ளேன்.

எனவே, கட்சிக்கு தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவே இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள சபை அமர்வில் நான் இராஜினமா செய்யவுள்ளேன்.

எனது இராஜினாமாவுக்குப் பின்னர் இடம்பெறவுள்ள வெற்றிடத்திற்கு எமது கட்சியில் மாஞ்சோலை பகுதியில் போட்டியிட்ட ஏ.எச்.நுபைல் என்பவர் பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்படவுள்ளார் என்று யூ.எல்.அஹமட் லெவ்வை மேலும் தெரிவித்தார்.

# மலையக பெருந்தோட்டங்களை இராணுவத்தினர் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அனுமதிக்க போவதில்லை - இராதாகிருஸ்ணன்

(க.கிஷாந்தன்)

மலையக பெருந்தோட்டங்களை இராணுவத்தினர் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அனுமதிக்க போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்;

'சம்பள நிர்ணய சபை 1000 விடயத்தில் தலையிட்டதனால் இன்று வித்தியாசமாக தோட்ட துறைமார் தொழிலாளர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தும் சூழல் உருவாகியுள்ளது.



ஹோல்டன் மற்றும் கந்தப்பளை தோட்டங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் தோட்ட துறைமார் வீதியில் இறங்கி போராடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் பிரதிபளிப்பாக தற்போது ஹய் போரஸ்ட் மாகுடுகல தோட்டத்தில் 6 இராணுவ வீரர்கள் தோட்ட நிர்வாகத்தை பொறுப்பேற்க தயாராவதாக அறிய முடிகின்றது. இது குறித்து மகுடுகல தோட்ட நிர்வாகத்திடம் வினவியதற்கு தமக்கு அது குறித்து தெரியாது என்கின்றனர். இவ்வாறு இராணுவத்திடம் தோட்ட நிர்வாகத்தை ஒப்படைப்பது பூதாகரமானது.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்கலை கொண்டுவந்ததன் மூலமே யுத்தம் ஏற்பட்;டது. ஆகவே தொழிலாலளர்களை நசுக்க கம்பனிகளும் அரசாங்கமும் முற்படுகிறதா? ஏன்ற சந்தேகமுள்ளது. ஆகவே அரசாங்கம் இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் மக்கள் போராட்டம் இடம்பெறும்.

தற்போதைய நிலையில் 1000 ரூபாவை கொடுத்து ஏனைய நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கைவைத்தால் மலையகத்தில் பாரிய தொழிற்சங்க போராட்டம் இடம் பெறும். இதன்போது அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும்' என்றார்.

# வீட்டுத் திட்டத்தை முற்றுப்பெறச் செய்து குடியிருக்க வழி செய்யுங்கள்

## பாதிப்டைந்த மக்கள் கோரிக்கை






(வாஸ் கூஞ்ஞ)

வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்கிய நல்லாட்சி அரசின் பணிப்பின் பேரில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பில் கடனாளிகளாக மாறியதுடன் இருந்த வீடுகளையும் அகற்றி நடுத்தெருவில் நிர்க்கதியாக இருக்கின்றோம் என தெரிவித்து பாதிபடைந்த குடும்பங்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தி தங்களுக்கு விமோசனம் வழங்க வேண்டும் என கோரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழு ஆதரவில் வீட்டுத் திட்டத்தில் பாதிப்படைந்த மக்கள் வெள்ளிக்கிழமையன்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஒரு சில மணித்தியாலங்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

இவ் போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு ஒரு மகஜரையும் மாவட்ட செயலாளருக்கு ஊடாக சென்றடைய கையளித்தனர்.

இவ் மகஜரில் தெரிவித்திருப்பதாவது வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்களுக்கான வீட்டுத்திட்டம் கடந்த 2019ம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கமானது தேசிய வீடமைப்பு அதிகார சபை மன்னார் பிராந்திய அலுவலகத்தினால் ஜகவபுரம், பற்றிமா நகர், ஜிம்றோன் நகர், சாந்திபுரம் ஆகிய கிராமங்களில் வழங்கியிருந்தது.

இது எமக்கு ஒரு மகிழ்ச்சியாக காணப்பட்டாலும் தற்பொழுது இது எங்களை ஒரு அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதாவது இவ் திட்டம் மூன்று மாதங்களுக்குள் முற்றுப் பெற வேண்டும் என்ற நிபந்தனையிலேயே இவ் திட்டம் எமக்கு வழங்கப்பட்டது.

நல்லாட்சி அரசில் நம்பிக்கை கொண்டவர்களாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த குடிசைகளை அகற்றிவிட்டு இவ் புதிய வீடுகளுக்கான அடித்தளங்களை போட்டு கட்டிடப் பொருட்களையும் கடனாக பெற்று வீட்டுத் திட்டத்தை துரிதப்படுத்தி மேற்கொண்டோம்.

இவ் வீட்டுத் திட்டங்களை பார்வையிட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் பணம் எமக்கு தருவதற்கான விண்ணப்பங்களையும் பூர்த்தி செய்து அரச முத்திரையின் மேல் பயனாளிகளான எங்கள் கையெழுத்துக்களையும் பெற்றுச் சென்றனர்.

ஆனால் எங்களுக்கு இதுவரை திட்டத்துக்கான பணமும் கிடைக்கவில்லை அத்துடன் குடியிருந்த எங்கள் வீடுகளையும் இழந்தவர்களாக தெரிவில் நிறுத்தப்பட்ட நிலைகளுக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே இவ் திட்டம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து சென்றுள்ள இந்த நிலையில் நாங்கள் அரசனை நம்பி புருஷனை கைவிட்டதுபோல் எங்கள் இல்லிடங்களை கைவிட்டநிலையில் நாடோடிகளாக இடம்பெயர்ந்து வாழும் நிலையை மாற்றி எங்கள் சொந்த வீட்டில் வாழவும் கடனிலிருந்து மீட்சி பெறவும் எங்கள் தேவையை பூரணபடுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இவ் மகஜரில் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு





நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்குள்ளான அலுவலகத்தினால் இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு காசோலைகளை வழங்கிவைத்தனர்.

இதன்போது கடந்த காலங்களில் இன்னல்களுக்குள்ளான 345 நபர்களுக்காக 168 இலட்சம் ரூபாய் இதன் போது காசோலைகளாக வழங்கிவைக்கப்பட்டது.

அந்த வகையில் பாதிக்கப்பட்ட 36 ஆலயங்களிற்கும், கடன் பாதிப்பிற்குள்ளான 26 நபர்களுக்கும் மேலும் சொத்துப் பாதிப்பிற்குள்ளான 280 நபர்களுக்கும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கிவைக்கப்பட்டன.



இந்நிகழ்வுகளில் அபிவிருத்திக்குழு தலைவரின் செயலாளர் திருமதி.மங்களேஸ்வரி சங்கர்,

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய திணைக்களகங்களின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டு நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் இக் கொடுப்பனவை வழங்கியமைக்காக அரசாங்கத்திற்கு தமது நன்றிகளை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மூதூர் பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக முபாரக் கடமைகளை பொறுப்பேற்றார்





(பொன்ஆனந்தம்)

மூதூர் பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக எம். பி. எம். முபாரக் வெள்ளிக்கிழமை முதல் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டரார்.

இந்நிழ்வு சர்வமத ஆசியுடன் இடம் பெற்றது.

ஏலவே பணியாற்றிய முபாரக் மாற்றலாகி போனதன்பிற்பாடு இவர் பதில் பிரதேச செயலாளராக பணியாற்றிய நிலையில் வெள்ளிக்கிழமை நிரந்தரமாக இவர் நியமனம் பற்று கடமைகளை ஏற்றுக்கொண்டார்

# சமுர்த்தி சௌபாக்யா வீடுகள் கையளிக்கும் நிகழ்வு





(எம்.எச்.எம்.அன்வர்)

காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவில் சமுர்த்தி சௌபாக்யா வீடுகள் கைளிக்கும் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் யூ. உதய சிரீதர் தலைமையில் நேற்றுஇடம்பெற்றது.

கிராம சேவக பிரிவுகளான 167அ, 167ஆ,167ஈ ஆகிய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் நால்வருக்கு இவ்வீடுகள் வழங்கிவைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சில்மியா சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பத்மா ஜெயராஜ் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ. எல். ஸெட். பஹ்மி பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் 04 ஆவது நாளாகவும் தொடரும் போராட்டம்



இலங்கையில் தமிழ் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான போராட்டம் மட்டக்களப்பில் 04வது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான இப் போராட்டத்தில் சர்வமத தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பலக்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட அரசியற் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு தங்கள் ஆரவினை நல்கி வருகின்றனர்.

வடகிழக்கில் தமிழ் மக்கள் அடக்கு முறைகளுக்கு உள்ளாகி வருவதாகவும், ஐநா மனித உரிமை பேரவையின் கூட்டம் நிறைவுபெற்றதன் பின்னர் இந்த நாட்டில் மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலையுள்ளதாகவும், அதன் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் சரியான முடிவினை எடுக்கவேண்டும் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.



குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் 04வது நாளான இன்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருனாகரம் (ஜனா), கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# ஹொரவ்பொத்தான மஸ்ஜிதுகள் சம்மேளனத்திற்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்குமிடைலான ஒன்றுகூடல்

(முஹம்மட் ஹாசில் )

ஹொரவ்பொத்தான மஸ்ஜிதுகள் சம்மேளனத்திற்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்குமிடைலான ஒன்றுகூடலொன்று அண்மையில் ஹொரவ்பொத்தான பஷார் பள்ளிவாசலில் அதன் நிர்வாக சபை தலைவர் தேசமான்ய, தேசகீர்த்தி A.M.A சியாம் ஹாஜியார் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஹொரவ்பொத்தான பஷார் பள்ளிவாசலின் செயலாளர் அப்துற் றஹ்மான் (நளீமி) அவர்களின் வரவேற்புரையை தொடர்ந்து ஹொரவ்பொத்தான பஷார் பள்ளிவாசலின் தலைவர் தேசமான்ய, தேசகீர்த்தி A.M.A சியாம் ஹாஜியார் அவர்கள் தலைமை உரை நிகத்தினார்.

இதனையடுத்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் நிம்ஷாத் ஒன்றுகூடலின் முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்தினார். அஹதிய்யா பாடசாலைகளை மஸ்ஜித்களில் ஆரம்பித்தல், பதிவு செய்யப்படாத மஸ்ஜித் நிருவாகிகளை பதிவு செய்தல், பதிவு செய்யப்படாத பள்ளிவாசல்களை பதிவு செய்து கொள்ளல் போன்ற விடயங்களை அவர் தெளிவுபடுத்தினார்.

குறித்த கூட்டத்தில் ஹொரவ்பொத்தான மஸ்ஜிதுகள்சம்மேளனத்தின் உறுப்பினர்கள், ஹொரவ்பொத்தான ஜம்மிய்யதுல் உலமா சபை உறுப்பினர்கள் மற்றும் ஹொரவ்பொத்தான, கெப்பித்திகொல்லாவ பிரதேச பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உற்பத்தி கிராமம் "வாரி சௌபாக்யா" வேலை திட்டம் கிண்ணியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைப்பு



(ஹஸ்பர் ஏ. ஹலீம்)

ஜனாதிபதியின் சௌபாக்கியா கொள்கை திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேச செயலக பிரிவின் பைசல் நகர் கிராம உத்தியோகத்தர் பிரில் சௌபாக்கிய திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் குறித்த நிகழ்வானது வியாழக்கிழமை இடம் பெற்றது.

பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துகோரள பங்கேற்று இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அப்பகுதியில் இருக்கும் கடல் தொழில் சங்கம்,சுயதொழில் முயற்சியாளர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இத் திட்டம் ஊடாக வாழ்வாதார உதவிகள் அவர்களின் தொழில்களை விருத்தி செய்யும் நோக்கில் வழங்கப்படவுள்ளது.

இதற்காக சுமார் 1 கோடியே 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் மூதூர் தொகுதி பொது ஜன பெரமுனவின் இணைப்பாளருமான நிமால் காமினி கேவா விதாரன, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரள அவர்களின் கிண்ணியா இணைப்பாளர் யு.எல்.பிர்தௌஸ் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# சம்மாந்துறை பிரதேச சமூர்த்தி வங்கிகள் ஒன்லைன் நடைமுறைகள் ஆரம்பித்து வைப்பு



(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸீம்)

அரச திணைக்களங்கள் நாட்டு மக்களுக்கான சேவையினை விரைவாகவும் வினைத்திறனுடனும் வழங்க வேண்டும் எனும் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக நாடுபூராகவும் சமூர்த்தி திணைக்களம் சமூர்த்தி வங்கிகளை கணனி மயப்படுத்தல் ஊடாக ஒன்லைன் நடைமுறைகளை முன்னெடுத்து வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்திலும் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள ஹிஜ்ரா சமூர்த்தி வங்கியின் சேவைகள் கணனி மயப்படுத்தல் ஊடாக ஒன்லைன் நடைமுறைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் யு.எல்.எம் சலீம் தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமூர்த்தி பதில் பணிப்பாளருமான வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வங்கிகளின் ஒன்லைன் நடைமுறைகள் ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந் நிகழ்வுகளில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, உதவிப் பிரதேச செயலாளர் எம்.எம் ஆசிக், சம்மாந்துறை பிரதேச செயலக் கணக்காளர் ஐ.எம் பாரிஸ், சமூர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அரச அலுவலகர்களுக்கான சிங்கள மொழி வகுப்புகள் மீண்டும் ஆரம்பம்



(ராசிக் நபாயிஸ்)

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் 2007-26 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டு அரச அலுவலகர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியைக் கற்கைநெறிகள் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கமைவாக தமிழ் பேசும் அரச அலுவலகர்களுக்கு சிங்களமொழி பாடநெறியும், சிங்கள மொழி பேசும் அரச அலுவலகர்களுக்கு தமிழ் மொழி பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இவ்வாறான பாடநெறிகள் அம்பாறை மாவட்டத்திற்கான பல அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும் நடைபெற்று வரும் நிலையில் நேற்று (06) இதற்கான ஆரம்ப நிகழ்வு நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.நம்ஸானின் நெறிப்படுத்தலில் கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நாட்டின் நிர்வாகத்துறையினைச் சிறப்பாக முன்னெடுக்கும் வகையிலும், சகல இன மக்களிடத்திலும் மொழி வழியிலான சமாதானம், ஐக்கியம், இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வகையிலும் அரச உத்தியோகத்தர்களை இரு மொழிப்பயன்பாட்டிற்கு தேர்ச்சி பெறச்செய்யும் நோக்கில் தமிழ் பேசும் அரச ஊழியர்களுக்கு சிங்களமொழி பாடநெறியும், சிங்களமொழி பேசும் அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழி பாடநெறியும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி நெறிக்கு வளவாளராக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பி.சந்திர குமாரி கலந்து கொண்டு பாடநெறிகளை ஆரம்பித்து வைத்தார்.

இதில் அலுவலகத்தில் கடமைபுரியும் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையினால் சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் சிரமதானம்



விளையாட்டு வீரர்களினதும், நடை பயிற்சிகளில் ஈடுபடும் பொதுமக்களினதும் நன்மை கருதி சிவானந்தா விளையாட்டு மைதானமானது மட்டக்களப்பு மாநகர சபையினால் நேற்று சிரமாதான அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா. தயாபரன் அவர்களிடம் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய மட்டக்களப்பு மாநகர சபையும், சிவானந்தா விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து இச் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர்.

மிகப் பழமையானதும், தொன்மை வாய்ந்ததுமான சிவானந்தா வித்தியாலய மைதானத்தினை பல்வேறு பகுதிகளை சேர்ந்த விளையாட்டு வீரர்களும், நடை பயிற்சிகளை மேற்கொள்ளும் பொதுமக்களும் பயன்படுத்தி வருவதாகவும். இருந்தும் அண்மைக் காலமாக இம்மைதானமானது பயன்படுத்த முடியாதவாறு காடுமண்டி காணப்படுவது தொடர்பில் மாநகர ஆணையாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உடனடியாக இம் மைதானமானது புனரமைக்கப்படுவதாகவும் இதற்காக மாநகர ஆணையாளருக்கு சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தமது நன்றிகளையும் தெரிவித்தார்.

அத்துடன் இரவு வேளையில் நடை பயிற்சிகளை மேற்கொள்ளும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி மின் விளக்குகளும் மாநகர சபையினால் பொருத்திக் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் ஷீரடி சாய் கருணாலயம் மகா கும்பாபிஷேகம்!

(ரக்ஸனா)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் தாமரைக்குளம் எனும் இடத்தில் பிரமாண்டமாய் அமையப்பெற்றுள்ள ஷீரடி சாய் கருணாலயத்தின் ஷீரடி சாய்நாதர் பிரதிஷ்டை மகா கும்பாபிஷேக குட முழுக்கு பெருவிழா ஏப்ரல் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 10.30 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளதாக ஷீரடி சாய் கருணாலயத்தின் ஆதீன கர்த்தா திருமதி சீதா விவேக் (நோர்வே) தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் ஷீரடி சாய்நாதருக்கு முதன் முதலாக பிரமாண்டமான முறையில் கருணாலயம் ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு கல்வி மற்றும் சமய, சமூக சேவைகளை புலம்பெயர்ந்து நோர்வேயில் வசிக்கும் பெரியகல்லாற்றைச் சேர்ந்த விவேக் சீதா குடும்பத்தினர் வழங்கி வருகின்றனர். ஷீரடி சாய் பாபவின் பக்தர்களான இவர்கள் தங்களுடைய சமூகப்பணியினை விஸ்தரிக்கும் நோக்கில் ஷீரடி சாய்நாதருக்கான கருணாலயம் ஊடாக தர்மப்பணியினை ஆற்றவுள்ளனர்.

இவ் ஆலயத்தின் பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணியளவில் விநாயகர் வழிபாடு, பிரதிஷ்டா சங்கல்பம், மஹா கணபதி ஹோமம் உள்ளிட்ட வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளன. இங்கு எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் திகதி ஷீரடி சாய் நாதருக்கு பக்தர்கள் பால் காப்பு சாத்தும் நிகழ்வு காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 02 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஷீரடி சாய் நாதர் பிரதிஸ்டை மகா கும்பாவிஷேக குட முழுக்கு பெருவிழா நடைபெறவுள்ளது. கும்பாவிஷே கத்தை தொடர்ந்து 48 தினங்கள் தினமும் காலை 9 மணிக்கு மண்டலாபிஷேக பூசையும், சாய்நாதருக்கு மங்கள ஆரத்தியும் நடைபெறும்.

ஈழத்து இசைக் கலைஞர் ஜெயந்தன் கந்தப்புவின் இசையில் உருவான ஷீரடி சாய்நாதரின் பக்திப்பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா வவுனியாவில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன், 02 ஆம் திகதி கொழும்பு ஷீரடி சாய் மத்திய நிலையத்திலும் இந் நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செழிப்பான உற்பத்தி கிராமங்களை ஆரம்பிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு








**(மட்டக்களப்பு நிருபர்)**

அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அவர்களது நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின்

சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் செழிப்பான வாரத்தினையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ''செழிப்பான உற்பத்தி கிராமங்களை ஆரம்பிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது தலைமையில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி.தட்சணகௌறி டினேஸ் அவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக பட்டிப்பளை பிரதேச சபையின் தவிசாளர் என்.புஸ்பலிங்கம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் எஸ்.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கடுக்காமுனை கிராம பொதுமக்களது பிரசன்னத்துடன் பனைசார் பொருட்கள் உற்பத்தி கிராம ஆரம்ப நிகழ்வானது மிகவும் கோலாகலமாக அதிதிகளினால் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பனைசார் உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கான வசதியினை கொண்ட கட்டடத்திற்கான கடிக்கல் நடப்பட்டதனைத் தொடர்ந்து,

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் அதிதிகளின் உரையினைத்தொடர்ந்து, பனைசார் தொழில் முயற்சியாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் குறைகளை அதிதிகள் செவிமடுத்ததுடன் அவற்றை எவ்வாறு எதிர்காலத்தில் நிவர்த்திப்பது மற்றும் குறைகளை நிவர்த்திப்பதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் தமது கருத்துக்களையும் தெரிவித்திருந்தார்.

இதன்போது பிரதேசத்தைச் சேர்ந்த பனைசார் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றினை அதிதிகள் பார்வையிட்டதுடன், கொள்வனவில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு முன்பாக பாதசாரிக்கடவை, வீதி சமிக்ஞை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை





**ச.தவசீலன்**

முல்லைத்தீவில் அமைந்துள்ள நீதிமன்றத்திற்கு முன்பாக பாதசாரிகள் கடவை, வீதி சமிக்ஞை இல்லாததனால் வீதியினை கடந்து செல்வதற்கு மக்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

முல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்பட்ட நீதிமன்றம் அ31 பிரதான வீதியில் இருப்பதனால் நீதிமன்றத்திற்கு முன்பாக அதிகமான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதனால் நீதிமன்றத்திற்கு தேவையின் நிமிர்த்தம் வரும் பொதுமக்கள் போக்குவரத்து கடவை இல்லாததனால் வீதியினை கடப்பதற்கு பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளாகியுள்ளனர்.

நீதிமன்றத்திற்கு முன்பாக வீதி சமிக்ஞை இல்லாததானாலும் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் நீதிமன்றம் இருப்பதனை கவனிக்காமல் ஒலி எழுப்பி நீதிமன்ற செயற்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர்.

குறித்த பகுதியில் பாதசாரிகள் கடவை, வீதி சமிக்ஞை இல்லாததனால் விபத்துக்கள் ஏற்பட கூடிய அதிக வாய்ப்புக்கள் இருப்பதனால் நீதிமன்றத்திற்கு முன்பாக வீதி சமிக்ஞை, பாதசாரிக்கடவையை உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்து அதனை அமைத்து தருமாறும் நீதிமன்றிற்கு வரும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருக்கோணேசப் பெருமானின் மஹா சிவராத்திரி பெருவிழா 2021...

(பங்குனி 11.03.2021 - வியாழக்கிழமை) மகாசிவராத்திரி பெருவிழா சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெறவுள்ளது. சமய அனுட்டானங்கள், நான்கு சாம அபிசேகங்களும், பூசைகளும் பின்வரும் நேர ஒழுங்கின்படி இடம்பெறும்என நிருவாகம் அறிவித்துள்ளது. ஆயினும் தற்போதைய சூழலில் பல்வேறுபட்ட மட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நகர்வலமும் மட்டுப்பாடுகளுடன்தான் நடைபெறும்.

1ம் சாம அபிசேகம் மாலை 4.30 மணி நடைபெற்று, தொடர்ந்து பூசைகள் இடம்பெறும்

2ம் சாம அபிசேகம் இரவு 8.30 மணிக்கும், தொடர்ந்து பூசையும்

3ம் சாம அபிசேகம் இரவு 10 மணிக்குத் தொடங்கி (லிங்கோற்பவர் காலம்) நள்ளிரவு 12.00 மணிவரை இடம்பெற்று தொடர்ந்து பூசைகள் நடைபெறும்

4ம் சாம அபிசேகம் அதிகாலை 4.00 மணிக்கு தொடர்ந்து பூசைகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

நாட்டிலும் ஏற்பட்டுள்ள கொரோனாசு19 தாக்கங்கள் காரணமாக ஆலயம் வரும் பக்தர்கள் சுகாதார நடைமுறைகள பின்பற்ற வேண்டும்.

1. ஆலயத்தில் நீண்ட நேரம் தரித்திருந்து வழிபாட்டினை மேற்கொள்ளலை தவிர்க்கவேண்டும்.

2.மாலை 05.00 முதல் நள்ளிரவு 11.00 மணிவரை லிங்கோற்ப முன் லிங்க மூர்த்திக்கு தீர்த்தம் வார்க்கலாம்.

3.அனைவரும் கட்டாயம் முக கவசங்களை அணிந்திருத்தல் வேண்டும்.

4.இம்முறை கலைநிகழ்வுகள் இடம்பெறமாட்டாது.

5.சுகாதார பாதுகாப்பிற்கு நீங்களே பொறுப்புக்குரியவர்களாவர்

6.சுகாதாரத் துறையினரதும், பாதுகாப்பு துறையினரதும் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

%.சிவராத்திரி தினத்தன்று அடியவர்கள் வழங்கும் ஒத்துழைப்பைப் பொறுத்தே, மறுநாள் 12.03.2021 அன்று, எம்பெருமானின் நகர்வலம் சிறப்பாக நடைபெற பேருதவியாக இருக்கும் என்பதை அனைவரும் சிந்தித்து செயல்படுமாறும் நிருவாகம் கோரிக்கை விடுத்துள்ளது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு...

இருவரும் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒத்துழைப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள். அதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன்.

என மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புகுழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அவர்களது நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு வெள்ளிக்கிழமை(05) மாலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம் அவர்களின் ஏற்பாட்டில் எருவில் கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்....

எமது நாட்டிலே திறந்த பொருளாதாரக் கொள்கை, மூடிய பொருளாதாரக் கொள்கை காணப்பட்டாலும் கடுமையான மூடிய பொருளாதாரக் கொள்கை காரணமாக ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க தோற்றுப்போன வரலாறும் உண்டு. இதனை எமது பாட்டன், பாட்டி சொன்னதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். தற்போது அரசியல் மாறிப்போய், கொள்கையும் மாறிப்போன சம்பவங்களையும் காணலாம். உலகத்திலே கொவிட்19 காரணமாக உலகப் பொருளாதார வீழ்ச்சியானது மிகவும் மோசமாக இடம்பிடித்துள்ளது. நம்நாட்டிலும் பொருளாதார வீழ்ச்சி, வருமான வீழ்ச்சி தனிநபர் வரைக்கும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிப்புக்கள் ஏற்பட்டு இடிந்து வீழ்ந்திருக்கும் மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இருக்கின்றது.

நாங்கள் தமிழ் மக்களுக்காக போராடினோம் அப்போது மின்மாற்றிகள் உடைக்கப்பட்டன. எங்களின் வீடுகளுக்கு பக்கத்தில் மின்சார வசதியில்லை. அதனால் எங்கள் பிள்ளைகள் படிக்கவில்லை. அதனால் வைத்தியர்கள் எங்கள் சமூகத்தில் குறைவாகத்தான் காணப்பட்டன. அதன் பின்னர் 2008 ஆண்டுக்கு பின்னர் அரசியல் என்றால் என்ன? அதிகாரம் என்றால் என்ன? முதலமைச்சர் என்றால் என்ன? அரசியலால் எங்கள் மக்களுக்கு என்ன செய்ய முடியும்? அரசியலால் எம்மக்களை எவ்வாறு வாழ வைக்க முடியும்? என்பதைப் பார்த்தோம்.

தற்போது மட்டக்களப்பு மாவட்ட மக்கள் நல்ல முடிவை எடுத்திருக்கின்றார்கள். இதுதான் தேவை எங்கள் மாவட்டத்திற்கு. அபிவிருத்தி சார்ந்த விடயத்துக்கு நானும், மற்றும் வியாழேந்திரன் அவர்களும், செயற்படுகின்றோம். அதேபோன்று மக்களின் உரிமையை தட்டிக்கேட்க இருவரையும் மட்டக்களப்பு மக்கள் நிதானமாக தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒத்துழைப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள். அதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன்.

வழமையாக சொல்லப்போனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெளிநாடுகளில் வாழ்கின்ற எம்மவர்கள் இலங்கையில் இருக்கின்ற தமிழ் மக்களிடம் பாலையும் தேனையையும் ஓட வைக்கின்றார்கள் என நினைக்கின்றார்கள். வெளிநாடுகளில் வாழுகின்ற நீங்க எம் மக்களுக்கு ஒன்றையையும் ஓட வைக்க தேவையில்லை நீங்கள் அங்கிருக்கும் உங்களின் நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்து இங்கே வாழுகின்ற மக்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்கி அவர்களின் பொருளாதாரத்தை தூக்கி விடுவதற்கு வழிகாட்டுங்கள்.

அங்கிருந்து இங்கு நம்மவர்கள் உற்பத்தி செய்யும் 5000 சாரிகளை வாங்கினாலே போதும். பாலும் தேனும் இல்லாத குடும்பங்களில் பாலும் தேனும் சிறப்பாக ஓடும். குடும்பங்கள் சீராக வாழும். பிள்ளைகள் விரும்பி படிப்பார்கள். இங்கே வைத்தியர்கள் உருவாகுவார்கள். இல்லாவிட்டால் நம்முடைய தமிழ் அரசியல் தலைமைகள், மக்கள் ஏசுவார்கள் படித்து பல வைத்தியர்கள் எமது மாவட்டத்தில் உருவாக்கினால் போதும். தமிழர்கள் சார்பில் பல வைத்தியர்கள் உருவாக்கினால் சிங்கள வைத்தியர்கள் நம்முடைய தமிழர் பிரதேசத்தில் ஏதற்கு? நம்முடையவர்கள் வைத்தியர்களாக பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற போது அல்லது பயிற்ச்சியில் இருக்கும் போது அவர்களுக்கு வெளிநாடுகளில் மாப்பிள்ளை அல்லது பெண் பார்த்து திருமணம் செய்து வைத்து வெளிநாடுகளில் குடியேறுவார்கள். இங்கே வைத்தியம் செய்வதற்கு வைத்தியர்கள் இல்லை. இப்படி பல பிரச்சனைகள் தமிழர் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

இதனை மாற்றியமைக்கும் பொறுப்பை தமிழ் மக்கள் சுமத்தி இருக்கின்றார்கள். இததனை முடிவுக்குக் கொண்டுவந்து ஒரு உறுதியான சமூகமாக கிழக்கு மாகாணத்தில் மீண்டும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு உறுதியான அரசியல், பொருளாதாரத்தோடு, கலை கலாச்சாரத்துடன் வாழவைக்கும் பொறுப்பு மிக்க சமூகமாக வாழ்வதற்குரிய பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றேன் என அவர் இதன் போது தெரிவித்தார்.